[1973 பிப்ரவரி 6

போக்குவரத்து ஆய்வு

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்): மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கடந்த ஐந்தாண்டுகளில், போக்குவரத்து ஆய்வினை நடத்துவதற்காக அறிவியல் சாதனங்களை வாங்க சென்னை, நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் செலவிட்ட தொகை எவ்வளவு?

(இ) அந்தக் கருவிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றனவா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ரூபாய் எண்ணூறு.

(இ) ஆம்.

Drying Facilities for Groundnuts

* 38. *Q.*—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the Government are aware that Agriculturists of Tiruchirappalli district who raise groundnuts are harassed for want of drying facilities for their crop which is harvested during November–December monsoon season; and

(*b*) if so, whether the Government consider the installation of suitable driers for their use?

வேர்க்கடலையை உலரவைப்பதற்கான வசதிகள்

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நவம்பர்-டிசம்பர் பருவ காலத்தில் அறுவடை செய்யப்படும் வேர்க்கடலையை உலரவைப்பதற்கான வசதிகள் இல்லாமையால், வேர்க்கடலை விளைவிக்கும் திருச்சிராப்பள்ளி மாவட்ட உழவர்கள் அவதியுறுகின்றனர் என்பது அரசுக்குத் தெரியுமா?

(இ) ஆம் எனில், அவர்களுடைய பயனுக்காக தகுந்த உலர வைக்கும் இயந்திரங்களை அரசு நிறுவக் கருதியுள்ளதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) பொதுவாக நவம்பர்-டிசம்பர் மாதங்களில் பெய்யும் பருவ மழை கடலை காய வைக்க முடியாத அளவிற்கு பெய்வதில்லை. எனவே விவசாயிகள் அறுவடை செய்த கடலையை காயவைக்க

1973 பிப்ரவரி 6]

கஷ்டப்படுவதில்லை. 1971-ம் ஆண்டு டிசம்பரில், முசிறி வட்டாரத்தில் அசாதாரண முறையில் மிக அதிக மழை பெய்ததால் நிலக்கடலை உலர்த்துவதில் கஷ்டம் ஏற்பட்டது. அப்பொழுது நிலக்கடலை நீண்ட நாட்களுக்கு நிழலில் உலர்த்தப்பட்டது.

(இ) இப்போதைக்கு அது மாதிரியான திட்டம் இல்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, குறிப்பாக திருச்சி மாவட்டத்தில் கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது இதுமாதிரி சிரமம் ஏற்பட்டு கடலையை காய வைக்க முடியாமல் நஷ்டம் ஏற்படுகிறது என்று சொல்கிறார்கள். தஞ்சை மாவட்டத்திலே நெல்லைப் பொறுத்து பல இடங்களில் உலர வைக்கிற சாதனங்களை மத்திய அரசாங்கத்தார் அமைத்தார்கள். அம்மாதிரி சில இடங்களில் திருச்சியிலே அமைப்பதற்கு மத்திய அரசுக்கு ஏதேனும் சிரமம் ஏற்படுகிறதா என்று தெரியவில்லை. நம்முடைய மாநில அரசு இப்படிப்பட்ட ஆலோசனையை அவர்களுக்கு வழங்குமா என்று அறிய விரும்புகிறேன். ஏனென்றால் கிட்டத்தட்ட 30 லட்சம் ஏக்கரிலே கடலை நமது மாநிலத்தின் பல பகுதிகளிலே பயிரிடப்பட்டு நமக்கு வெளி நாட்டுச் செலாவணிகளும் கிடைக்கக் கூடிய வசதியிருக்கிறது என்பதையும் அமைச்சர் அவர்கள் கருத்திலே கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, திருச்சி மாவட்டத்தைப் பொறுத்த வரையில், நான் முதலிலே குறிப்பிட்டது போல, ஒரு சில காலங்களிலேதான் அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதிலே 'டிரையர்ஸ்', அதைத்தான் அவர்கள் அங்கத்தினர் குறிப்பிட்டார்கள் என்று நினைக்கிறேன், உலர வைக்கும் திட்டம் இப்போது இல்லை என்பதைத்தான் நான் இப்போது குறிப்பிட்டேன்.

திரு. அய்யணன் அம்பலம் : தலைவரவர்களே, இப்போது மதுரை மாவட்டத்தில் பெரியார் பாசனப் பகுதியில் நெல் அறுவடை காலங்களில் உலர வைப்பதற்கு களங்கள் இல்லாமல் ஈரமிருப்பதால், ஊராட்சி ஒன்றியங்களில் களங்கள் அமைப்பதற்கு அரசாங்கம் ஏதாவது மானியம் கொடுத்து ஊக்கம் அளிக்குமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திலுமே களம் வைப்பதற்கு ஊராட்சி ஒன்றியங்கள் திட்டம் தயாரித்து அனுப்ப வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி அவைகள் அனுப்புமானால், கவனிக்கப்படும்.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, மாநிலத்திலே அதிகமாகக் கடலை உற்பத்தி செய்யப்படும் மாவட்டம் வட ஆற்காடு மாவட்டம் என்று புள்ளி

விவரம். அந்த மாவட்டத்திற்குக் கடலை உலர வைக்கும் கருவி அமைக்க அரசு மேலும் பரிசீலிக்குமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, அதிகமாக நிலக் கடலை விளைகிற மாவட்டம் வட ஆற்காடு மாவட்டம் என்று அந்த மாவட்ட உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். கோவை மாவட்டத்திலேயும் அதிக மாக உற்பத்தி செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு, அப்படி தற்சமயம் எதுவுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU A. R. DAMODARAN: Sir, in view of the unhappy experience in Thanjavur district where such dryers which were installed for drying paddy were not utilised, will the Government consider the desirability of not putting up dryers in any district?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, அப்படி ஒன்றும் வரவில்லை. அப்படி வருமானால், அதைப்பற்றிப் பரிசீலனை செய்யப்படும்.

Banana Cultivation.

* 39. *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the Department of Horticulture of the Coimbatore Agricultural University has entered into collaboration with the Indian Council of Agricultural Research for Banana cultivation; and

(*b*) if so, the details thereof?

வாழைச் சாகுபடி

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) கோயம்புத்தூர் வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் தோட்டக் கலைத் துறை, வாழைச் சாகுபடிக்காக, வேளாண்மை ஆராய்ச்சி இந்தியக் கழகத்துடன் உடனுழைப்பு ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) ஆம்.

(இ) மத்திய விவசாய ஆராய்ச்சிக் கழகம், நான்காவது ஐந்தாண்டு திட்டத்தின்கீழ் அனைத்திந்திய ஒருங்கிணைக்கப்பட்ட பழ அபிவிருத்தித் திட்டம் ஒன்றை நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட பல்வேறு பாகங்களில் ஆரம்